செ.வெ.எண்.376 நாள் : 03.08.2017

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் மணல் ஏற்றும் லாரிகளுக்கு பதிவு சரிபார்த்தல் முகாம் 07.08.2017 முதல் 11.08.2017 வரை நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மணல் ஏற்றும் லாரிகளின் பதிவுகளை முறைப்படுத்தும் வகையில் அதனை சரிபார்ப்பதற்கான முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் 07.08.2017 முதல் 11.08.2017 வரை காலை 10.00 மணிமுதல் மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மணல் ஏற்றும் லாரி உரிமையாளர்கள் www.tnsand.in என்ற இணையதளத்தில் முதலில் பதிவு செய்து, அதன் ஒப்புகைச் சீட்டு மற்றும் வண்டியின் பதிவு சான்றிதழ் அசல் புத்தகம் (RC book original), அனுமதி (permit), காப்பீடு (Insurance) மற்றும் சாலை வரி கட்டிய ரசீது (Road tax receipt) ஆகிய அசல் ஆவணங்களுடன் அவற்றின் நகல் (Xerox) ஒன்றினையும் கொண்டு வர வேண்டும்.

இம்முகாமில் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களால் மேற்கண்ட பதிவு சான்றிதழின் ஒப்புகை சீட்டில் உள்ள விவரங்களை அசலான ஆவணங்களைக் கொண்டு ஆய்வு செய்து, பதிவு உறுதி செய்யப்படும்.

இம்முகாமை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மணல் லாரி உரிமையாளர்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**